
பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | தை 19 | வெள்ளிக்கிழமை | 31.01.2025 | அதிர்வு 182


## மாவையின் இறுதிக்கிரியை மாவிட்டபுரத்தில் ஞாயிறன்று

### காலை 8 மணிக்கு ஆரம்பம்



(எஸ்.நிதர்ஷன்)

மறைந்த தலைவர் மாவை சோமசுந்தரம் சேனாதிராஜாவின் இறு திக்கிரியைகள் 06



# தமிழ்த் தேசியத்தின் தலைவர்களை ஒன்றிணைத்த போராளியே மாவை

## புகழுடலுக்கு அஞ்சலி செலுத்திய பின் சி.வி.கே. தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசிய இனத்தின் தலைவர்களை ஒன்றிணைத்த ஒரு போராளியே மாவை சேனாதிராஜா என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சி.வி.கே.சிவ ஞானம் தெரிவித்தார். 06

# காலம் முழுவதையும் மக்களுக்காக செலவிட்ட தலைவரே சேனாதிராஜா

## அனுதாபச் செய்தியில் வடக்கு ஆளுநர்

காலம் முழுவதையும் மக்களுக்காகவே செலவிட்ட தலைவர் ஒருவரை இன்று இழந்து நிற்கின்றோம் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சோ.சேனாதிராஜாவின் மறைவையொட்டி வடக்கு மாகாண ஆளுநர் விடுத்துள்ள இரங்கல் செய்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- 06






மறைந்த தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக தெல்லிப்பழையில் உள்ள அவரது இல்லத்துக்கு நேற்று நேரில் சென்ற கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், ஞாயிறன்று மூத்த தலைவரின் இறுதிக்கிரியைகள் வீட்டில் முடிவுற்ற பின்னர் – பூதவுடலை மயானத்துக்கு எடுத்துச் செல்ல முன்பு – யாழ்ப்பாணம், மார்ட்டின் வீதியில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையகத்துக்கு எடுத்து வந்து அஞ்சலிக்கு வைக்குமாறு மாவை சேனாதிராஜாவின் மகனிடம் நேரடியாகக் கோரிக்கை விடுத்தார் எனத் தெரிகிறது.

வீட்டாருடன் கலந்து பேசி அது பற்றி பதில் தருவார் என கட்சியின் பதில் தலைவருக்கு அச்சமயம் பதிலளிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

பதில் ஏதும் பின்னர் சிவஞானத்திற்கு வழங்கப்பட்டதா என்பதை அறிய முடியவில்லை. ஆயினும் இப்போது வெளியாகியுள்ள இறுதிக்கிரியை ஒழுங்குகள் பற்றிய தகவல்களின்படி 06

# தமிழரசுக் கட்சியின் ஒற்றுமைக்காக கடுமையாகப் போராடியவர் சேனாதிரா

## இரங்கல் செய்தியில் சித்தர் தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

"மாவை சேனாதிராஜா தனது இறுதிக் காலத்தில், இயற்கையான மூப்பு, உடல் உபாதைகள் அனைத்துக்கும் மத்தியிலும் தனது தமிழரசுக் கட்சியின் ஒற்றுமைக்காகவும் கட்சியின் தடம் மாறாத செயற்பாடுகளுக்காகவும் கடுமையாகப் போராடியதைக் கண்டோம். அதற்காக கடுமையான விமர்சனங்களுக்கும் அவமானங்களுக்கும் அவர் முகம் கொடுத்ததையும், அதன் காரணமாக மனதாலும் உடலாலும் அவர் தளர்ந்திருந்ததையும் கண்டோம்."

– தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) கட்சியின் தலைவர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

"தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும் தமிழ்த் தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் முதன்மைப் போராளிகளில் ஒருவருமான மாவை சேனாதிராஜாவின் மறைவுக்கு எங்கள் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தனது இளவயதுக் காலம் முதல் இறுதி மூச்சுவரை, தமிழ் மக்களின் விடுதலை குறித்த அவரது எண்ணங்களையும் செயற்பாடுகளையும் நானும், நான் சார்ந்த அமைப்பு உறுப்பினர்களும் நன்கு அறிவோம்.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் தீவிரம் பெற்ற, எம் இனத்திற்கு எதிரான திட்டமிடப்பட்ட இன ஒடுக்கல் நடவடிக்கைகள் காரணமாக அன்றைய தமிழ் இளைஞர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்த போது மிகத் தீவிரமாக செயற்பட்டவர்களில் மாவை அண்ணரும் ஒருவராவார்.

தேசிய இன விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தின் ஆரம்ப காலங்களில் விடுதலைப்புலிகளின் தலைவராக இருந்த உமாமகேஸ்வரனுடனும், , விடுதலைப்புலிகளின் இராணுவப் பிரிவின் தலைவராக இருந்த பிரபாகரனுடனும் மிகவும் நெருக்கமாக செயற்பட்டிருந்ததோடு நெருக்கடியான பல சந்தர்ப்பங்களில் உதவிகளையும் செய்திருந்ததோடு, அவர்கள் பிரிந்த பின்பும் இருவருடனும் தனித்தனியாகவும் தொடர்புகளை வைத்திருந்தார்.

அதேநேரத்தில், தந்தை செல்வாவின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட வன்முறையற்ற அரசியல் போராட்டங்களிலும் தந்தை செல்வாவுக்கும் அண்ணர் அமிர்தலிங்கத்துக்கும் மிகவும் நம்பிக்கைக்குரியவாராக தொண்டனாக தொடர்ச்சியாக பங்குபற்றியிருந்தார்.

இவ்வாறான செயற்பாடுகள் காரணமாக பத்து தடவைகளுக்கு மேல் கைது செய்யப்பட்டு பல வருடங்களாக அரச படைகளின் சிறைகளில் சித்திரவதைகளை அனுபவித்திருந்தார். இன்று அவர் சந்திக்கும் வலிதான உடல் உபாதைகளுக்கு அன்று அவர் அனுபவித்த சித்திரவதைகளும் ஒரு காரணமாகும்.

தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி, இளைஞர் பேரவை, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றில் பல பொறுப்பான பதவிகளை பெற்றுக்கொண்ட மாவை அண்ணர், அவற்றின் ஊடாக தனது கட்சிக்கும் தமிழ் மக்களுக்கும் தன்னாலியன்றவரை கடமைகளைச் செய்திருந்தார்.

1970 ஆம் ஆண்டு முதல் மிக நெருக்கமாக, தொடர்ச்சியாக அவருடன் இணைந்து செயற்படும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. எழுபதுகளின் முற்பகுதியில் தமிழ் மக்களுக்கான அரசியலைப் பேசுவதே நெருக்கடியானது எனக் கருதப்பட்ட காலங்களில், நான் சாரதியாகவும், அவர் கட்சித் தொண்டராகவும் செயற்பட்டு விடுதலைப் பிரசுரங்களை மக்களிடையே விநியோகித்த சந்தர்ப்பங்களை இன்று நினைத்துப் பார்க்கின்றேன்.

ஒரு சாதாரண கட்சித் தொண்டராக இருந்த காலத்தில் கூட தன்னுடைய ஒவ்வொரு செயற்பாட்டிலும் அவர் கொண்டிருந்த அர்ப்பணிப்பை உணர்ந்து கொண்டேன். தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்ட பின்னரும் கூட, அதன் செயற்பாடுகளில் தீவிரமாக இருந்த வேளையிலும், தமிழரசுக் கட்சியை உயிர்ப்புடன் வைத்திருந்தவர்களில் முக்கியமானவர் மாவை அண்ணர்.

தமிழரசுக் கட்சியின் மையமாகச் செயற்பட்டிருந்த தலைவர்கள் வரிசையின் முடிவாக மாவை அண்ணரின் மறைவு அமைந்து விடுமோ என்பது இன்று தமிழ்த் தேசியவாதிகள் பலரினதும் கவலையாக உள்ளது.

ஒரு கட்சியின் தொண்டனாக, பிரதான செயற்பாட்டாளராக, தலைவனாக, தமிழர் தாயகத்தில் அவரது கால் படாத கிராமங்கள் இல்லை எனலாம்.

ஆரம்ப காலங்களில் எனது தந்தையின் செயலாளருக்குரிய அரச பஸ் பயணச்சீட்டினைப் பயன்படுத்தி எப்போதும் தாயகமெங்கும் களப் பயணங்களை அவர் மேற்கொள்வதை நான் கண்டிருக்கின்றேன். தமிழ்த் தேசியத்தைப் பாதுகாப்பதிலும், தனது கட்சியையும் வளர்த்தெடுப்பதிலும் அவரது அயராத உழைப்பையும் உணர்ந்திருக்கின்றேன்.

தனது இறுதிக் காலத்தில், இயற்கையான மூப்பு, உடல் உபாதைகள் அனைத்துக்கும் மத்தியிலும் தனது கட்சியின் ஒற்றுமைக்காகவும் கட்சியின் தடம் மாறாத செயற்பாடுகளுக்காகவும் கடுமையாகப் போராடியதைக் கண்டோம். அதற்காக கடுமையான விமர்சனங்களுக்கும் அவமானங்களுக்கும் அவர் முகம்கொடுத்ததையும், அதன் காரணமாக மனதாலும் உடலாலும் அவர் தளர்ந்திருந்ததையும் கண்டோம்.

வசதி குறைந்த குடும்பத்திலிருந்து வந்த சாதரண இளைஞர் ஒருவர், ஒரு இனத்தின் தலைவன் எனும் இடத்தை அடையும் வரையிலான அவரது விடுதலை நோக்கிய பயணம், தமிழ் மக்களின் விடுதலையை நேசிக்கின்ற, அவர்களுடைய விடுதலைப் போராட்டத்துக்கு தலைமை கொடுக்க தயாராகின்ற அனைத்து இளைஞர்களுக்குமான அரசியல் பாடமாக அமையும் என்பது மட்டும் நிச்சயம்.

மாவை அண்ணரை இழந்து துயருறும் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், கட்சித் தொண்டர்கள் அனைவருடனும் எமது துயரங்களைப் பகிர்ந்து கொள்கின்றோம்." – என்றுள்ளது.

## மாவைக்கு சுமந்திரன் இரங்கல்



மறைந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவுக்குத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தனது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

எக்ஸ் தளத்தில் பதிவொன்றை வைத்து தனது இரங்கல் செய்தியை அவர் வெளியிட்டுள்ளார்.

குறித்த பதிவில், "மாவை சேனாதிராஜா பேரினவாதத்துக்கு எதிரான மாபெரும் அடையாளமாக ஆறு தசாப்தங்களுக்கு மேலாகத் திகழ்ந்தவரும், பல ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தவரும் ஆவார்.

அவரது மறையையொட்டிய எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்." – என்று சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

# அநீதிக்கு எதிராகத் துணிந்து குரல் கொடுத்தவரே மாவை!

## அமைச்சர் சந்திரசேகர் இரங்கல்

(எஸ்.நிதர்ஷன்)

"அறவழிப் போராட்டம், சிறைவாசம் எனத் தனது ஐந்து தசாப்தகால அரசியல் பயணத்தில் தமிழ் மக்களுக்காகக் குரல் எழுப்பி வந்த மாவை சேனாதிராஜாவின் மறைவு தமிழ் மக்களுக்குப் பேரிழப்பாகும்." - என்று கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் மறைவு தொடர்பில் அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:-

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரான யாழ்ப்பாணம் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவின் மறைவு செய்தி பெரும் மன வேதனையைத் தருகின்றது. அவரின் மறைவானது தமிழரசுக் கட்சிக்கும், தமிழ் மக்களுக்கும் பேரிழப்பாகும்.



அநீதிக்கு எதிராகவும், நீதிக்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகவும் துணிந்து குரல் கொடுத்த மாவை சேனாதிராஜா, ஜே.வி.பியின் ஸ்தாபகர் தோழர் ரோஹண விஜேவீரவின் போராட்டங்களைக்கூட நேர் கொண்ட பார்வையுடன் அவதானித்தனர். ஆட்சியாளர்களின் அடக்குமுறைக்கு எதிராக ஜே.பி.யின் அணுகுமுறை தொடர்பில் ஆதரவு போக்கைக் கடைபிடித்தவர்.

5 தசாப்தகால அரசியல் பயணத்தின்போது, மக்களின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளித்துச் செயற்பட்ட அரசியல்வாதியாவார். மாவை அண்ணன் மறைந்தாலும், மக்களுக்காக அவர் எதிர்பார்த்தவற்றை நிச்சயம் நாம் செய்வோம்.

மாவை சேனாதிராஜாவின் பிரிவால் துயர் உற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தார், ஆதரவாளர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அன்னாரின் ஆத்மா இளைப்பாற இறைவனை பிரார்த்திக்கின்றேன்." - என்றுள்ளது.

# உழவு இயந்திரம் - மோட்டார் சைக்கிள் மோதி இளம் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாப மரணம்!



(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு, சுதந்திரபுரம் பகுதியில் உழவு இயந்திரத்துடன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

சுதந்திரபுரம் பகுதியில் காலபோக அறுவடை செய்து நெல் ஏற்றி வந்த உழவு இயந்திரமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளம் குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

விபத்தை ஏற்படுத்திவிட்டு உழவு இயந்திரத்துடன் சாரதி தப்பிச் சென்ற நிலையில் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த 36 வயதுடைய இளம் குடும்பஸ்தரே பலியானார். இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காக குரல் எழுப்பியவர் மாவை சேனாதிராசா

## ஹிஸ்புல்லாஹ் எம்.பி இரங்கல் செய்தி



(வவுணதீவு நிருபர்)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவரும், தமிழ் மக்களுக்காகத் தன் வாழ்நாள்களைப் போராட்டங்களோடும், சிறைவாசங்களோடும் கடந்து பெரும் பங்காற்றிய சரித்திர நாயகன் மாவை சேனாதிராசா அவர்களின் மறைவு மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியிருக்கிறது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

தாம் வெளியிட்ட அனுதாப செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மறைந்த தலைவர் மாவை சேனாதிராசா அவர்கள் என்னோடு நாடாளுமன்றத்தின் இருந்த ஒருவர். அவரை பற்றி நான் நன்றாக அறிந்தவன். தமிழ் மக்கள் அரசியல் ரீதியாக பிரச்சினைகளை எதிர்நோக்குகின்ற பல்வேறு சந்தர்ப்பங்களின் தைரியமாக குரல் கொடுத்தவர். மிகவும் நீதியாகவும் நியாயமாகவும் நடந்துகொள்கின்றவர். நான் எப்போதும் மதிக்கும் தலைவர்களில் ஒருவர்.

நீண்ட காலமாக தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு குரல் கொடுத்த இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராசா ஐயாவின் மறைவு தமிழர் வரலாற்றில் நிரப்ப முடியாத வெற்றிடமாக இருக்கும் என்று நம்புகின்றேன்.

அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறேன். – எனவும் தெரிவித்தார்.

# தமிழ் பேசும் மக்களின் உரிமைக்காக பாடுபட்ட உன்னத தலைவர் மாவை!

## ஐக்கிய மக்கள் முன்னணி பிரதித் தலைவர் நளீர் இரங்கல்

தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக வாழ்வை அர்ப்பணித்து சேவையாற்றிய தலைவர் மாவை எஸ். சேனாதிராஜா. அவரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐக்கிய மக்கள் முன்னணி பிரதித் தலைவர் எம்.ஏ.நளீர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவரது இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக இணைந்து செயல்பட்டால்தான் தமது உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்று அசையா நம்பிக்கை கொண்டவர் மாவை சேனாதிராஜா.

கொவிட் 19 இல் மரணித்த முஸ்லிங்களது ஜனாசாக்கள் வலுக்கட்டாயமாக வஞ்சகமான முறையில் எரிக்கப்பட்ட போது முஸ்லிம் சமூகத்துக்கு ஆதரவாகவும் ஜனாஸா எரிப்புக்கு எதிராகவும் ஓங்கி குரல் கொடுத்தவர். இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக நாடாளுமன்றத்திலும் குரல் கொடுக்க வைத்ததை நன்றியுடன் நினைவு கூறுகிறேன்.



தமிழ் பேசும் மக்களுக்கும் நாட்டுக்கும் விசுவாசமான முறையில் சேவையாற்றிய தலைவர் என்ற அடிப்படையில் அவரது இழப்பு இலங்கையின் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு பேரிழப்பாகும்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள்தலைவர்மாவைஎஸ்.சேனாதிராஜா தனது கட்சியின் கொள்கைகளைப் பற்றுறுதியுடன் முன்னெடுத்து உரிமைகள் மறுக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களின் குரலாக செயற்பட்டு அந்த மக்களுக்கு நியாயமான நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டும் என்று தனது இறுதி மூச்சு வரை பயணித்த உன்னத தலைவர். அவரது மறைவு தமிழ் பேசும் மக்களுக்கு மட்டுமன்றி இலங்கை மக்கள் அனைவருக்குமே ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் இலங்கை தமிழரசுக் கட்சியினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறேன்.– என்றுள்ளது.

# அம்பாறைத் தமிழ் மக்களை நேசித்த மாமனிதர் மாவை முழுத் தமிழினத்திற்கே பேரிழப்பு என்கிறார் ஜெயசிறில்

( வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தையும், அம்பாறை தமிழர்களையும் நேசித்த ஒரு பெரும் தலைவர். இலங்கை தமிழரசு கட்சியின் இருக்கக்கூடிய அம்பாறை மாவட்டத்தை நன்கு தெரிந்த துணிச்சல் மிக்க பேச்சாளர். எனது அரசியல் பாதையிலே என்னை இந்த நிலைக்கு உயர செய்ய வைத்த அரசியல் ஆசான். என்றும் மறக்க முடியாத மாமனிதன். உங்களுடைய இழப்பு வடகிழக்கு தமிழர்களுக்கு மாத்திரமல்ல உலகத்தில் வாழ்கின்ற தமிழர்களுக்கு பேரிழப்பாக கருதுகிறேன்.

– இவ்வாறு காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தனது அனுதாபச் செய்தியில் கூறியுள்ளார்.

அதில் மேலும் கூறுகையில் –



இலங்கைத் தமிழரசு கட்சியின் முன்னாள் தலைவரும் தமிழ் தேசியப் பாதையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் காலப்பகுதியில் இருந்து ஜனநாயக ரீதியாக எமது மக்களுக்காக தன்னால் இயன்ற செயல்பாடுகளைச் செய்தவர். இளவயதிலிருந்து பல தடவைகள் சிறைவாசம் அனுபவித்தவர்.

தடுப்புக் காவலில் தலையில் பட்ட அடியின் வேதனையை பிரச்சார மேடையில் கூறிக் கொள்வார் . அந்த அடியின் தாக்கமே இன்று அவர் உயிரே பிரிய காரணம்.

உங்களைப் போன்று ஒரு பொது நலம் உள்ள ஒரு தலைவரை இனி இலங்கைத் தமிழரசு கட்சியில் காண முடியுமா? பதவிக்காகப் பறக்கின்றவர்கள் மத்தியில் தமிழ் இனத்திற்காக உங்கள் வாழ்நாள் அனைத்தையும் அர்ப்பணித்த பெருந்தலைவர். சம்பந்தன் ஐயா வழியிலே பயணித்த நீங்கள் இன்று அவரிடத்திலே சென்றுவிட்டீர்கள். உலகத்தில் தமிழ் தேசிய வாதிகளை உலுக்கிய மிகப்பெரும் துக்க நாளாக இதைக் கருத முடிகின்றது .

எமது இனத்தின் விடுதலைக்கான உங்கள் வாழ்நாள் செயல்பாடு மறக்க முடியாதது. மனம் வருந்துகின்றோம்.– என்றார்.

# 15,000 தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் தேசிய வேலைத்திட்டம் மட்டக்களப்பில் ஆரம்பம்!









(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

நாட்டின் வளர்ச்சிக்காக சிறந்த தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் நாட்டில் 15,000 தொழில் முயற்சியாளர்களை இனங்கண்டு அவர்களை ஊக்குவிக்கும் நோக்கில் அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள தேசிய திட்டத்தின் கிழக்கு மாகாணத்திற்கான வேலைத்திட்டம் நேற்று மட்டக்களப்பில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பிரதேச அபிவிருத்தி வங்கியின் தலைவர் லசந்த பர்னான்டோ தலைமையில் நடைபெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி, நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். நிகழ்விற்கு விசேட அதிதிகளாக மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் என்.தனஞ்சயன், மண்முனை வடக்கு உதவிப் பிரதேச செயலாளர் சதா சுபாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன் போது தங்கள் மீது நம்பிக்கை கொண்ட சிறந்த தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்தும் நோக்கில் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட தொழில் முயற்சியாளர்களுக்கான கடன் தொகைக்கான காசோலைகள் அமைச்சர் உள்ளிட்ட அதிதிகளினால் பயனாளிகளுக்கு வழங்கிவைக்கப்பட்டன.

இதன் போது தேசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகளினால் அமைச்சர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாவை சேனாதிராஜாவின் புகழுடலை தமிழரசுக் கட்சி அலுவலகத்திற்கு எடுத்துச் செல்லும் ஏற்பாடு எதுவும் இருப்பதாக தெரியவில்லை.

இதே சமயம் வரும் எட்டாம் திகதி மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் நடைபெற இருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம், மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் மறைவையொட்டி தள்ளி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. புதிய திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

உத்தேச மத்திய குழு கூட்டம் தள்ளிப் போவதால், புதிய அரசமைப்பு உருவாக்க விவகாரம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு செயல்படுவதற்கான வாய்ப்புகள் குறித்து ஆராய்வதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூட்டியுள்ள கலந்துரையாடலும் தள்ளிப்போகும் சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

இவ்விடயத்தில் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவின் தீர்மானத்தைக் கவனத்தில் எடுத்துச் செயற்பட கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பார்த்திருக்கின்றார் என்பது தெரிந்ததே.

\+ \+ \+

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் என்றாலே ஒரே அமர்க்களம்தான் என்ற நிலையில் விடயங்கள் அரங்கேறுகின்றன.

மாவட்டச் செயலக வளாகத்தில் இயங்கும் வடக்கிற்கான ஒரேயொரு காணிச் சீர்திருத்த ஆணைக்குழு அலுவலகத்தில் தற்போது அலுவலக உதவியாளர் மற்றும் சாரதி உள்பட 7 பேர் பணியாற்றுகின்றனர். இவர்களில் சாரதி, அலுவலக உதவியாளர் தவிர்ந்த ஏனைய 5 பேருக்கும் கூண்டோடு இட மாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இடமாற்றம் வழங்குவதும் தவறு கிடையாது. ஆனால் இந்த ஐவரும் இடமாற்றலாகிப் போனாலும் இரு மாதங்களின் பின்பே இந்த இடத்திற்கு வேறு அதிகாரிகள் வருகின்றனர். அது வரை அந்த அலுவலகத்தின் பணிகள் யாவும் கோவிந்தாவோ தெரியவில்லை.

இது இவ்வாறானால், மறுபுறத்தில் மாவட்ட நிர்வாக மட்டமும் குளறுபடியில் தான்.

யாழ் மாவட்டத்திற்கு ஓர் மேலதிக அரச அதிபர் வெற்றிடம் இருப்பதனால் அந்த இடத்திற்கு ஒருவரை மாவட்ட அரச அதிபர் கடந்த மாதம் பரிந்துரைத்தார். பரிந்துரைக்கப்பட்டவரை விடவும் சிரேஷ்ட தரத்தில் பத்து அலுவலகர்கள் இருக்கும்போது பதினோராவது இடத்தில் இருப்பவரைப் பரிந்துரைத்தமை தவறு என பத்து மேல் நிலை உத்தியோகத்தர்களும் ஒப்பமிட்டு ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியதனால் பதினோராவதாக உள்ள அதிகாரிக்கான நியமனம் தடைப்பட்டது என்பது தெரிந்ததே.

ஜனாதிபதிக்கு முறைப்பாட்டு கடிதத்தை ஏற்பாடு செய்தவர் தற்போது பணியில் உள்ள மேலதிக அரச அதிபர் என எண்ணி தமக்கு விசுவாசமான உத்தியோகத்தர்கள் மூலம் தற்போது பணியில் உள்ள மேலதிக அரச அதிபருக்கு எதிராக மேலிட ஏற்பாட்டில் முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. ஆக மொத்தம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் "ரீச்சர்... இவ என்னை நுள்ளிப் போட்டா....!" பாணி நிர்வாகம்தான் நடக்கின்றது போலும்!

# நுவரெலியாவில் கடும் மழை; விவசாய நிலங்கள் பாதிப்பு

நுவரெலியா மாவட்டத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாக நுவரெலியா – கந்தபொல பகுதியிலுள்ள விவசாய நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளதால் மரக்கறிகள் அழிவடைந்துள்ளன.

நுவரெலியா, கந்தபொல மற்றும் கல்பாலம் ஆகிய பகுதிகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் பயிரிடப்பட்ட மரக்கறி வகைகள் அனைத்தும் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டதால் பாரிய நட்டத்தை எதிர்கொண்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் நுவரெலியா – ராகலை பிரதான வீதியில் போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் கால்வாய்கள் முறையாக புனரமைக்கப்பட்டு பராமரிக்கப்படாததன் காரணத்தினால் இவ்வாறு அடிக்கடி வெள்ளம் ஏற்பட்டு விவசாய நிலங்கள் அழிவடைவதாக விவசாயிகள் குறிப்பிட்டுள்ளனர்.

## மாவையின் இறுதிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாளைமறுதினம்ஞாயிற்றுக்கிழமையாழ். மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்.

அதனைத் தொடர்ந்து காலை 10 மணிக்கு அஞ்சலி உரைகள் ஆரம்பமாகும்.

பின்னர் மதியம் ஒரு மணியளவில் மாவிட்டபுரம் – தச்சன் காடு இந்து மயானத்தில் புகழுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

## காலம் முழுவதையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"தமிழ் மக்களை நீண்ட காலம் பிரதிநிதித்துவப்படுத்திய மூத்த அரசியல்வாதியும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவருமான மாவை. சோ.சேனாதிராஜாவின் மறைவை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன்.

அவர் தனது வாழ்நாளை தமிழ் மக்களின் அரசியல் மற்றும் சமூக மேம்பாட்டுக்காக அர்ப்பணித்து, அவர்களின் உரிமைகள் மற்றும் அபிலாஷைகளுக்காக அயராது உழைத்தவர். அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்பு மற்றும் தமிழ் மக்களுக்கான தியாகம் என்பன அரசியல் நிலப்பரப்பில் ஒரு அழியாத அடையாளத்தை ஏற்படுத்தியுள்ளன.

யாழ். மாவட்ட செயலராக நான் முன்னர் பணியாற்றிய காலத்தில், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களில் ஒருவராக இருந்த அவர், தமிழ்ச் சமூகத்துக்காக ஆற்றிய பணிகள் அளப்பரியன. வலிகாமம் வடக்கின் மீள்குடியமர்வு மற்றும் அந்தப் பிரதேசத்தின் உயர்வுக்காக அவர் செய்த சேவைகளை அருகிலிருந்து பார்த்திருக்கின்றேன்.

காலம் முழுவதையும் இந்த மக்களுக்காகவே செலவிட்ட தலைவர் ஒருவரை இன்று இழந்து நிற்கின்றோம்.

வடக்கு மாகாண மக்கள் சார்பாக, அவரது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்களுக்கு எனது மனமார்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவரது ஆன்மா சாந்தியடையட்டும்." – என்றுள்ளது.

## காலியில் மூவர் சுட்டுக்கொலை!

காலி – ஹினிதும பனங்கல பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் ரி – 56 ரக துப்பாக்கியால் இந்தத் துப்பாக்கிச்சூட்டை நடத்தியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் இருவர் 29 மற்றும் 54 வயதுடையவர்கள் என்பதோடு, மற்றையவரின் வயது உறுதிப்படுத்தப் படவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பான விரிவான விசாரணைகளை ஹினிதும பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## தமிழ்த் தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவின் புகழுடலுக்கு நேற்று அஞ்சலி செலுத்திய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:–

"மாவை சேனாதிராஜாவின் இழப்பு என்பது இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய இனத்துக்குமான இழப்பாகும்.

தமிழ்த் தேசிய இனத்தின் தலைவர்களை ஒன்றிணைத்த ஒரு போராளியே மாவை சேனாதிராஜா. தமிழ் மக்களுக்காகத் தனது வாழ்க்கையில் பல தியாகங்களையும், அர்ப்பணிப்புக்களையும் செய்த ஒருவரே அவர்.

கட்சியைக் கட்டி வளர்ப்பதில் எல்லோரையும் அந்நியோன்யமாக அரவணைத்து சென்ற ஒருவரே அவர்..

மாவை சேனாதிராஜாவின் இழப்பு இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குப் பேரிழப்பு என்பதுடன் அது கட்சிக்குப் பாரிய தாக்கத்தையும் ஏற்படுத்தும்.

நாம் தமிழரசுக் கட்சி சார்ந்து, எல்லா வேறுபாடுகளையும் மறந்து மாவை சேனாதிராஜாவின் நினைவாக பிளவுகள், பிரிவுகள் இன்றி ஒற்றுமையாக முன் செல்ல வேண்டும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியை வளர்த்து மீண்டும் பழைய நிலைமைக்குக் கொண்டுவர வேண்டும். அது மாவை சேனாதிராஜாவின் பெயராலேயே நிறைவேற வேண்டும்.

நல்ல ஆத்மா வஞ்சகம் இல்லாத உள்ளத்தைக் கொண்டவரே மாவை சேனாதிராஜா. அவருடைய ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்று நான் பிரார்த்திக்கின்றேன்." – என்றார்.







# இந்துக் கல்லூரியில் 2025 கால்கோள் விழா

2025 ஆம் ஆண்டுக்கான கால்கோள் விழா கொழும்பு 4 இல் அமைந்துள்ள இந்துக் கல்லூரியில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் கணபதிப்பிள்ளை நாகேந்திரா அவர்களின் தலைமையில் கல்லூரி ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள் மற்றும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், தரம் 1 இற்கு அனுமதி பெற்ற மாணவர்கள் என ஏராளமானவர்கள் பங்கேளித்தனர்.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக கல்வி அமைச்சின் ஆரம்ப பிரிவிற்கான உதவி பணிப்பாளர் திருமதி சகுந்தலா தேவி மனோகரன் கலந்து கொண்டிருந்ததுடன் மாணவர்களின் வளர்ச்சியையும் மாணவர்கள் பாடசாலையுடன் பேண வேண்டிய தொடர்புகளையும் எடுத்துரைத்தார்.

மேற்படி நிகழ்வில் தரம் 1 இற்கு தெரிவாகியுள்ள மாணவர்களை வரவேற்கும் முகமாக தரம் இரண்டைச் சேர்ந்த மாணவர்களின் வரவேற்பு நடனம் மற்றும் சிறப்பு நடனங்களையும் வழங்கினர்.








# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நிழல் யுத்தம்

பொருளாதார நெருக்கடியில் சிக்கி உள்ள நாட்டை அதிலிருந்து மீட்டெடுத்து, மக்களுக்கு செழுமையான வாழ்க்கையை பெற்றுத் தருவதாக வாக்குறுதிகள் வழங்கி, ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசு அந்தத் திசையில் பயணிப்பதாகத் தெரியவில்லை.

மாறாக, அற்பத்தனமான அரசியல் பிரச்சினைகளைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, அதில் அரசியல் செய்வதை மட்டுமே தன்னுடைய போக்காக அது காட்டி வருகிறது.

ஏதோ முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்படும் சிறப்புரிமைகள், விசேட வசதிகள், வரப்பிரசாதங்கள் காரணமாகவே நாடு ஒட்டாண்டியாகிவிட்டது என்பது போல ஜனாதிபதியும் அவரின் பரிவாரங்களும் கருத்து வெளியிட்டு வருகின்றமை கேலிக்கூத்தான விவகாரமாகும்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் உட்பட பல சலுகைகளைக் குறைப்பது குறித்து விசாரிக்க உயர்மட்டக் குழு ஒன்றை அரசு நியமித்தது.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் உட்பட பல சலுகைகள் அரமைப்பு ஏற்பாடுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டவை. அவற்றை அரசமைப்புத் திருத்தம் இல்லாமல் குறைக்கவோ அல்லது ரத்து செய்யவோ முடியாது என அக்குழு அறிக்கை சமர்பித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அக்குழு அவ்வாறு உறுதி செய்திருப்பதைப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவும் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஆனால், முன்னாள் ஜனாதிபதிகளின் அனைத்து சலுகைகளும் குறைக்கப்படும் என்றும், அரசமைப்புத் திருத்தம் இல்லாமலேயே இதைச் செய்ய முடியும் என்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க பிதற்றுகின்றார்.

இருப்பினும், ஓய்வுபெற்ற ஜனாதிபதிகள் மற்றும் அமைச்சர்களின் ஓய்வூதியங்கள் மற்றும் சலுகைகளைக் குறைப்பது அரசமைப்புத் திருத்தத்தின் மூலமே செய்யப்பட வேண்டும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையர் பிரதிபா மஹாநாம ஹேவா சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏற்கனவே முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பை ஒருதலைப் பட்சமாக அரசு தன்பாட்டில் குறைத்த விவகாரம் உயர்நீதிமன்றத்திற்கு போயிருக்கின்றது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது பாதுகாப்பு குறைக்கப்பட்ட விடயத்தை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்திருக்கிறார்.

சரியான பாதுகாப்பு மீளாய்வு செய்யப்பட்டு, உரிய தரத்தில் விடயம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே இந்தப் பாதுகாப்பு குறைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்பதை உயர் நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டிய இக்கட்டு அரசு தரப்புக்கு வருமென எதிர்பார்க்கப்படுகின்றது. மஹிந்த ராஜபக்ஷ போன்ற ஜனாதிபதி ஒருவருக்கு அத்தகைய உயிர்ப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லை என்ற அறிக்கையை பாதுகாப்பு தரப்பில் எந்த அதிகார மட்டம் உத்தியோகபூர்வ ஆவணமாகச் சமர்ப்பிக்கும் என்ற கேள்விக்குறி பல வட்டாரங்களிலும் எழுப்பப்படுகின்றது.

அந்த விடயத்தில் சட்டச் சிக்கலை எதிர்கொள்ளும் அநுரகுமார திஸநாயக்கவின் அரசு இப்போது முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட ஏனைய வசதி வாய்ப்புகள், சிறப்புரிமைகளை கண்மூடித்தனமாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து, இன்னொரு சட்டச் சிக்கலுக்குள் மாட்டப் போகின்றது என்றே தோன்றுகின்றது.

அரசமைப்புதிருத்தங்களைகொண்டுவரத் தேவையான நாடாளுமன்றப் பெரும்பான்மையை -மூன்றில்இரண்டு பங்கு ஆதரவை - அரசு கொண்டு இருக்கின்ற போதிலும், இந்த விடயத்திற்காக அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வருவது அரசுக்கு அரசியல் ரீதியான பின்னடைவுகளைத் தரக்கூடும் எனவும் கருதப்படுகிறது.

நாட்டின் பொருளாதார நெருக்கடி தொடர்பில் செய்ய வேண்டிய எத்தனையோ பணிகள் இருக்க தேவையற்ற வேலையில் - அர்த்தமற்ற அரசியலில் - புதிய ஆட்சி பீடம் ஈடுபட்டு நிழல் யுத்தம் நடத்திக் கொண்டிருப்பதாகவே தோன்றுகின்றது.








# எங்களால் இயலாவிட்டால் செய்யக்கூடிய ஒருவரிடம் பதவியை ஒப்படைத்துவிட்டு வெளியேறிவிட வேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

"எங்களால் செய்ய முடிந்தால் பதவியில் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் செய்யக்கூடிய ஒருவரிடம் பதவியை ஒப்படைத்து விட்டு வெளியேறிவிட வேண்டும்."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் பல்வேறு நிதி மூலங்கள் ஊடாக 10 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்ட பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் சிசுக்கள் அதி தீவிர சிகிச்சைப் பிரிவு நேற்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் முதன்முறையாக தாயும் சிசுவும் ஒன்றாக இருந்து சிகிச்சை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் சிசுக்கள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை யின் பணிப்பாளர் வைத்திய வை.திவாகர், தனது தலைமை உரையில், இருக்கின்ற மனிதவளம் உள்ளிட்ட அனைத்து வளங்களையும் பயன்படுத்தி எவ்வாறு மருத்துவமனை மேம்படுத்தப்பட்டது என்பதைக் குறிப்பிட்டார்.

அத்துடன் சுகாதாரத்துறை மீது சகட்டுமேனிக்குக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், சுகாதாரத்துறை அடிமட்டத்திலிருந்து எவ்வாறு இங்கு கட்டி யெழுப்பப்பட்டுள்ளது என்பதையும், அதனை அனைவரும் மறந்துவிட்டனர் என்றும் வேதனையுடன் அவர் சுட்டிக்காட் டினார்.

நாட்டின் முதன்மை பிரச்சினையாக ஊழல் கூறப்பட்டாலும், வினைத்திறனற்ற பணியாற்றுகையே முதன்மையானது என்று குறிப்பிட்ட வைத்திய அத்தியட்சகர் "சும்மா இருப்பதையே" அதிகளவானர்கள் விரும்புகின்றனர் எனவும், அவர்கள் தொடர்பில் யாரும் அலட்டிக்கொள்வதில்லை என்றும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், தனது சிறப்பு விருந்தி னர் உரையில், 2005ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தப் பதவிக்கு வந்ததாகவும், அப்போது யாழ்ப்பாணம் மாவட் டத்தில் ஓய்வுபெற்ற மூவரே மருத்துவ அதிகாரிகளாகப் பணியாற்றியதாகவும், இன்று 350 பேர் பணியாற்றுக் கின்ற நிலைமைக்கு வந்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தின் சுகாதாரத்துறை சாம்பலிருந்தே மீண்டெழுந்திருக்கின்றது என்பதையும் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் சுட்டிக்காட்டினார்.

மேலும் தெல்லிப்பழை, பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைகள் ஓரளவு சிறப்பாக இயங்குகின்றமையால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் நெருக்கடிக் களைக் குறைக்க முடிந்துள்ளதாகவும், எதிர்காலத்தில் சாவகச்சேரி மற்றும் ஊர்காவற்றுறை வைத்தியசாலைக ளின் வசதிகளை அதிகரிப்பதன் ஊடாக யாழ். போதனா வைத்தியசாலையின் பணிச்சுமையை மேலும் குறைக்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் ஆளணி மீளாய்வு அவசியம் மேற்கொள்ளப் பட வேண்டும் என்றும் ஆளுநரிடம் அவர் கோரிக்கை முன் வைத்தார்.

மேலும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் திறந்து வைக்கப்பட்ட சிசுக்கள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு ஒட்டுமொத்த வடக்கு மாகாணத்துக்கும் சேவைகளை வழங்கும் என்றும் அவர் தனது உரையில் சுட்டிக்காட்டினார்.

முக்கியமாக கடந்த டிசம்பர் மாதம் பரவிய எலிக்காய்ச் சலை இங்குள்ள வைத்தியர்கள், தாதியர்கள், சிற்றூழியர்கள் மற்றும் பொதுச் சுகாதாரத்துறையினர் இணைந்து கட்டுப் படுத்தினர் என்றும், இது தொடர்பில் மத்திய சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவு மிகச் சிறந்த பாராட்டைத் தெரிவித்துள்ளது என்றும் குறிப்பிட்ட அவர், இது உங்களின் அர்ப்பணிப்பான சேவைக்குக் கிடைத்த வெற்றி என்றும் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் ந.வேதநாயகன் தனது பிரதம விருந்தினர் உரையில்,

"ஓரிடத்தின் தலைமைத்துவத்தில்தான் அதன் வெற்றி தங்கியிருக்கின்றது என்பது உண்மை. உங்கள் வைத்திய அத்தியட்சகர் திவாகர், தெல்லிப்பழை வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக இருந்தபோது அதை வளப்படுத்தி திறம்ப இயக்கினார். தற்போது இந்த வைத்தியசாலையைத் திறம்பட இயக்குகின்றார். அவர் முன்வைத்த கோரிக்கை நிறைவேற்றப்படும் வரையில் ஓயமாட்டார்.

வைத்திய அத்தியட்சகர் தனது தலைமை உரை யில் குறிப்பிட்டதைப் போன்று அலுவலகங்களில் "சும்மா இருப்பவர்கள்"தான் இன்று அதிகமாகிக்கொண்டு செல்கின்ற னர். என்னைச் சந்திக்கும் பொதுமக்களும் அதனைத்தான் சொல்கின்றனர். ஓர் அலுவலகத்துக்குச் சென்றால் இருவர் வேலை செய்வார்கள். ஏனையோர் பேசாமல் இருப்பார்கள் என்று முறையிடுகின்றார்கள். இதுபோதாது என்று எதிர் மறையாகச் சிந்திக்கும் அலுவலர்களும் அதிகமாகின்றது.

"முடியாது" என்ற வார்த்தைதான் அவர்களிடமிருந்து வருகின்றனது. தாம் எதையும் எம்மால் செய்ய முடியும் என நினைக்க வேண்டும். அல்லது அதை எப்படிச் செய்ய லாம் என்பதைச் சிந்திக்கவேண்டும். அப்போதுதான் நாம் முன்னேற முடியும்.

என்னை அரசியலுக்கு அழைத்து வருவதற்கு சிலர் கடந்த காலங்களில் முயற்சித்தார்கள். நான் அதை அடி யோடு மறுத்துவிட்டேன். நான் ஒருபோதும் அரசிய லுக்கு வரப்போவதுமில்லை. எனக்கு அந்த எண்ணமும் இல்லை.

ஆளணிப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு நாம் மாற்றுத் திட்டங்களைத் தயாரிக்க வேண்டும். இந்த வைத்தி யசாலையின் ஏனைய தேவைகளில் எங்களால் செய்து தரக் கூடியவற்றை விரைந்து செய்து தருவோம்." – என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலர் திருமதி ப.ஜெயராணி, பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொண் டனர்.












# சுவசெரிய சேவைக்கு 150 புதிய வாகனங்கள்

1990 என்ற தொலைபேசி அழைப்பு ஊடாக முன்னெடுக்கப்படும் சுவசெரிய நோயாளர் காவு வண்டி சேவைக்காக 150 புதிய வாகனங்களைப் பெற்றுக் கொள்வதற்கான அமைச்சரவை பத்திரம் முன்வைக்கப்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இராஜகிரியவில் அமைந்துள்ள சுவசெரிய நோயாளர் காவு வண்டி சேவை நிலையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் கூறியுள்ளார்.

இந்த நோயாளர் காவு வண்டி சேவை புதிய திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அரிசி இறக்குமதியை நிறுத்த அரசாங்கம் தீர்மானம்



அரிசி இறக்குமதியை நிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நிதி அமைச்சின் அதிகாரிகள் அரசாங்க நிதி பற்றிய குழுவிடம் தெரிவித்துள்ளனர்.

இதன்படி அறுவடை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், தேவையான அரிசி இருப்புகளைப் பெறமுடியும் என அண்மையில் நடைபெற்ற அரசாங்க நிதி பற்றிய குழுக் கூட்டத்தில் அமைச்சின் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனிடையே, எதிர்காலத்தில் நெல்லை கொள்வனவு செய்வதற்காக திறைசேரியிடமிருந்து நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்கப்படவுள்ள 5 பில்லியன் ரூபாய் நிதி குறித்து குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ஹர்ஷ டி சில்வா வினவியதுடன், அந்த நிதியை உரிய முறையில் பயன்படுத்துவதற்கான திட்டமொன்றின் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

இதன்படி, நெல் கொள்முதல் செயல்முறை கடுமையான மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்வதற்கும், செயல்பாட்டில் ஏற்படக்கூடிய முறை கேடுகளைத் தடுப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது குறித்து குழுக்கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.




# பூதன்வயல் பாடசாலையின் சிக்கல்கள் குறித்து நேரில்சென்று ஆராய்ந்தார் ரவிகரன் எம்.பி.

(பா.சதீசன்)

முல்லைத்தீவு – கரைதுறைப்பற்று பிரதேசசெயலர்பிரிவில் பூதன்வயல் பகுதியில் இயங்கிவரும் தண்ணிமுறிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் காணப்படும் சிக்கல் நிலைமைகள் குறித்து வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று முன்தினம் நேரில்சென்று ஆராய்ந்துள்ளார்.

குறிப்பாக பூதன்வயல் பகுதியில் இடப்பெயர்விற்கு முன்னர் பாடசாலை இயங்கிய காணியை தனியார் ஒருவர் அடாத்தாக அபகரித்து வைத்திருக்கும் நிலையில், இந்த பாடசாலை பூதன்வயல் கிராமஅ பிவிருத்திச் சங்கத்திற்குரிய பொதுநோக்கு மண்டபத்தில் இயங்கிவருகின்றது.

இந்நிலையில், காணியை மீட்டெடுப்பதற்கு அப்பகுதிமக்கள் தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர். அதன் ஒருகட்டமாக பாடசாலைக் காணியினை விடுவிப்பது தொடர்பில் நீதிமன்றில் வழக்கொன்றும் இடம்பெற்றுவருகின்றது.

இவ்வாறான சூழலில் பாடசாலைக்கென காணி ஒன்றில்லாத நிலையில், பாடசாலை அபிவிருத்திக்கென ஒதுக்கப்படுகின்ற நிதி ஒதுக்கீடுகளும் திரும்பிச்செல்கின்ற நிலையும் காணப்படுகின்றது. இதனால் குறித்த பாடசாலையானது பாரிய வளப்பற்றாக்குறைகளுடன் காணப்படுவதுடன், கல்விகற்கும் மாணவர்களும், கற்பிக்கும் ஆசிரியர்களும் பலத்த இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இத்தகைய சூழலில் கடந்த 27 ஆம் திகதியன்று பூதன்வயல் தண்ணிமுறிப்பு அ.த.க பாடசாலை அமைந்துள்ள காணிக்கு அருகாமையில் பாடசாலை காணிக்கான தீர்வு கிடைக்கும் வரை தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஊர்மக்கள் மற்றும், பாடசாலை சமூகத்தினர் ஈடுபட்டனர்.

இந்நிலையில் குறித்த போராட்டம் இடம்பெற்ற இடத்திற்கு வருகைதந்த கரைதுறைப்பற்று பிரதேசசெயலக மேலதிக பிரதேசசெயலர் மற்றும், காணிஉத்தியோகத்தர், அப்பகுதி கிராம அலுவலர், பொலிசார் உள்ளிட்ட தரப்பினர் பாடசாலைக் காணிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், பாடசாலையில் தற்போது நிலவும் அடிப்படைக் குறைபாடுகளைத் தீர்க்கவும் நடவடிக்கை எடுப்பதாக போராட்டக்காரர்களிடம் உறுதியளித்ததைத்தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டிருந்தது.

இந் நிலையில் இந்தவிடயங்கள் தொடர்பில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்கு பூதன்வயல் கிராமமக்கள் முறையிட்டதையடுத்து, குறித்த பாடசாலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் நேரடியாகச்சென்று பாடசாலையில் நிலவும் சிக்கல் நிலைமைகள் குறித்து ஆராய்ந்ததுடன், பாடசாலை ஆசிரியர்கள், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிகளுடனும் கலந்துரையாடியிருந்தார்.

அத்தோடு இடப்பெயர்விற்கு முன்னர் பாடசாலை இயங்கிய குறித்த காணியினையும் நாடாளுமன்ற உறுப்பினர் பார்வையிட்டுமிருந்தார்.








# இன்று யாழ் வரும் ஜனாதிபதிக்கு எதிராக நடக்கும் போராட்டத்துக்கு தடை விதிக்க நீதிமன்று மறுப்பு



யாழ்ப்பாணத்துக்கு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா இன்று விஜயம் செய்யவுள்ள நிலையில் அவருக்கு எதிராகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படலாம் எனக் கருதி ஐந்து பேருக்கு எதிராகத் தடை உத்தரவு கோரி யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்று முன்தினன் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

ஜனாதிபதியின் நிகழ்வுகளுக்கு இடையூறு இல்லாமல், அரசமைப்புக்குட்பட்ட வகையில் கவனயீர்ப்பை முன்னெப்பதற்கான உரிமை சகலருக்கும் இருப்பதாக நீதிமன்றம் தெரிவித்தது.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க யாழ்ப்பாணத்தில் பல்வேறு கூட்டங்களில் பங்கேற்பதற்காக இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

இந்நிலையில், யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதிக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கான போராட்டத்தைத் தடுக்கும் வகையில் ஐந்து பேருக்குத் தடைக் கட்டளை கோரி பொலிஸார் நீதிமன்றில் விண்ணப்பித்திருந்தனர்.

இது தொடர்பில் தங்கள் தரப்பு நிலைப்பாட்டை நேரடியாகவோ, சட்டத்தரணி ஊடாகவோ யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் இன்று முன்வைக்குமாறு நீதிமன்றம் பிரதிவாதிகளுக்கு கட்டளையிட்டிருந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, வடக்கு மாகாண வேலையில்லா பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் ச.சசிகரன், போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் பிரபாகரன், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் தலைவர் முருகையா கோமகன் உள்ளிட்ட ஐந்து பேருக்கு எதிராகத் தடை கட்டளை கோரி வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், அதனை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

வடக்கு மாகாண வேலையில்லா பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் ச.சசிகரன் மற்றும் போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் பிரபாகரன் சார்பில் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆஜராகி தனது வாதங்களை முன்வைத்தார்.

# கிழக்கு மாகாணத்திற்கு புதிதாக 250 ஆசிரியர்கள் நேற்று நியமனம்



(எஸ்.கீதபொன்கலன்)

கிழக்கு மாகாணத்திற்கு புதிதாக 250 ஆசிரியர்கள் நேற்று நியமிக்கப்பட்டனர்.இவர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு திருகோணமலை விவேகானந்தா கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

திருகோணமலைக்கு தமிழ் மொழி மூலம் - 42 பேரும், சிங்கள மொழிமூலம்-19 பேரும், மட்டக்களப்பிற்கு தமிழ் மொழி மூலம்-94 பேரும், அம்பாறைக்கு தமிழ் மொழி மூலம்-61 பேரும், சிங்கள மொழிமூலம்-34 பேரும் ஆசிரிய நியமனத்தைப் பெற்றுள்ளனர்.

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்தணசேகர தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புத்துறை பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்ரா, மாகாண பிரதம செயலாளர், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப்பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டு ஆசிரியர்களுக்கான நியமனக்கடிதங்களை வழங்கி வைத்தனர்.



# வவுனியாவில் போதைப்பொருளுடன் வயோதிபப் பெண் ஒருவர் கைதானார்

(கி.வசந்தன்)

வவுனியாவில் போதைப்பொருளுடன் வயோதிபப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பூவரசங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மடுக்கந்தை விசேட அதிரடிப்படையினர் செட்டிகுளம் பகுதியில் வைத்து 51 வயதுடைய வயோதிப பெண் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.



இவரிடம் இருந்து 1740 மில்லி கிராம் ஹெரோயின் மற்றும் 2380 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலதிக விசாரணை பூவரசங்குளம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. விசாரணைகளின்பின்அந்தப்பெண்ணை நீதிமன்றில் முற்படுத்த பூவரசங்குளம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# போதையில் வர்த்தக நிலையத்தில் அட்டகாசம் புரிந்த இந்து மதகுரு!

## வவுனியா பொலிஸாரினால் கைது

(கி.வசந்தன்)

வவுனியா, புகையிரத வீதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் மது போதையில் அட்டகாசம் செய்த இந்து மதகுரு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் நேற்று (30.01) தெரிவித்தனர்.

வவுனியா, ரயில் நிலைய வீதியில் மது போதையில் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் சென்ற இந்து மதகுரு ஒருவர் அப்பகுதியில் உள்ள உணவகம் ஒன்றின் கொத்து ரொட்டி போடும் அடைப்பின் கண்ணாடியை உடைத்து சேதப்படுத்தியமையுடன், அருகில் இருந்த தொலைக்காட்சி திருத்துமிடத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்த பழைய தொலைக் காட்சி பெட்டிகளையும் சேதப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து அந்த வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் வீதியில் சென்றோர் குறித்த மதகுருவை மடக்கிப்பிடித்து வைத்திருந்தமையுடன் வவுனியா பொலிஸாருக்குத் தகவல் வழங்கியிருந்தனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் இந்து மதகுவை கைது செய்தது, வவுனியா பொலிஸில் காவலில் வைத்து விசாரணைகளை மேற்கொண்ட பின் நேற்று பொலிஸ் பிணையில் விடுவித்துள்ளனர்.



# மவுஸ்சாகலை நீர் தேக்கத்தில் முதியவர் நீரில் மூழ்கி மரணம்

மஸ்கெலியா மவுஸ்சாகலை நீர் தேக்க பகுதியில் நீராடச் சென்ற முதியவர் நீரில் மூழ்கி பலியானார்.

இச்சம்பவம் நேற்று மதியம் 2.20 மணியளவில் இடம் பெற்று உள்ளது.

குடா மஸ்கெலியா பகுதியைச் சேர்ந்த 79 வயது உடைய ஜோன் சிங்கோ என்பவர் நீராட சென்ற வேளையில் நீரில் மூழ்கி மரணித்து உள்ளார்.

இவரது உடலம் நேற்று மாலை கரை ஒதுங்கிய நிலையில் சம்பவ இடத்துக்கு சென்ற மஸ்கெலியா பொலிஸார் உடலை உடற் கூற்று பரிசோதனை மேற்கொள்ள டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றனர்.

அங்கு இன்று சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் உடற் கூற்று பரிசோதனை மேற்கொள்ள ஏற்பாடு செய்ய பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.




# போக்குவரத்து சேவைகள் துறைகளில் காணப்படும் சிக்கல்களுக்கு தீர்வுகாண அமைச்சுசார் உப குழுக்கள்

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் துறையில் காணப்படும் சிக்கல்களுக்கு தீர்வுகளைக் கண்டறிய 3 அமைச்சுசார் உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

10 ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரில் நடைபெற்ற முதலாவது அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெற்ற போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அலுவல்கள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் இந்த ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

போக்குவரத்து தொழிற்துறையிலுள்ள தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் முதலாவது உப குழு நியமிக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜகத் விதான, திணிந்து சமன், தேவானந்த சுரவீர ஆகியோர் இதன் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

போக்குவரத்துத்துறை சம்பந்தமான சட்டரீதியான கட்டமைப்பை வலுப்படுத்தி வழிநடத்துதல் தொடர்பில் மற்றுமொரு உப குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களான லக்மாலி ஹேமசந்திர, சுகத் வசந்த டி சில்வா, தனுர திஸாநாயக்க, சுஜீவ திசாநாயக்க இதன் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

போக்குவரத்துத் துறையுடன் தொடர்புடைய மேலதிக சேவைகளை உருவாக்குவதன் மூலம் வருமானம் ஈட்டுவதை நோக்காகக் கொண்டு மூன்றாவது உப குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவீந்திர பண்டார மற்றும் தனுஷ்க ரங்கநாத் ஆகியோர் இதன் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.



# பாவனைக்கு உதவாத கோதுமை மா கண்டுபிடிப்பு

சேதவத்த பகுதியில் கொள்கலன் ஒன்றில் இருந்து பாவனைக்கு உதவாத கோதுமை மா தொகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தலா 25 கிலோ கொண்ட 30 ஆயிரம் பொதிகள் வரை அதிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு கிடைத்த முறைப்பாட்டிற்கு அமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது புழுக்கள் காணப்பட்ட கோதுமை மா தொகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த கோதுமை மா தொகையை கொண்டுவந்த நபர் தொடர்பாக இது வரை தகவல்கள் வெளியாகவில்லை.



# மட்டக்களப்பில் ஊடகவியலாளர்கள் நேற்று தீப்பந்தம் ஏந்திப் போராட்டம்

**(க.சரவணன்)**

மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட, கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களை நினைவு கூரும் கறுப்பு ஜனவரியை முன்னிட்டு நேற்று வியாழக்கிழமை மட்டு. காந்தி பூங்காவில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவுத்தூபி அருகில் ஊடகவியலாளர்கள் தீப்பந்த ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டு. ஊடக அமையம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் இணைந்து முன்னெடுத்த ஏற்பாட்டின்படி அங்கு மாலை 5.00 மணிக்கு ஒன்றினைந்த ஊடகவியலாளர்கள், அரசியல்வாதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களை நினைவு கூர்ந்து நினைவு தூபியில் சுடர் ஏற்றி 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட, கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி தீப்பந்தம் ஏற்றி சுமார் ஒரு மணித்தியாலம் போராட்டத்தில் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.











# ஒரே மாதத்தில் 1,000 ஆமைகள் இறப்பு: தமிழ் நாடு அரசிடம் அன்புமணி கேள்வி

“ஒரு மாதத்தில் 1000 கடல் ஆமைகள் இறந்துள்ளன. தஞ்சம் தேடி வரும் அரிய உயிரினங்களைக் காக்கும் கடமை தமிழக அரசுக்கு இல்லையா?” என பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“சென்னையின் வடக்கு எல்லையான பழவேற்காட்டில் தொடங்கி முதல் செங்கல்பட்டு மாவட்டத்தின் கல்பாக்கம் வரையிலான வங்கக் கடற்கரையில் முட்டையிட்டு குஞ்சு பொறிப்பதற்காக உலகின் பல நாடுகளில் இருந்த வந்த ஆலிவ் ரிட்லி கடல் ஆமைகளில், ஆயிரத்திற்கும் மேற்பட்டவை கடந்த ஒரு மாதத்தில் உயிரிழந்திருக்கின்றன என்ற செய்தி பெரும் அதிர்ச்சியளிக்கிறது. கடல் ஆமைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்காத தமிழக அரசு தான் இதற்கு பொறுப்பேற்க வேண்டும்.

உலகில் வேகமாக அழிந்து வரும் கடல் ஆமை இனங்களில் ஒன்றான ஆலிவ் ரிட்லி எனப்படும் சிற்றாமைகள் முட்டையிட்டு குஞ்சு பொறிப்பதற்கு ஏற்ற இடமாக வங்கக் கடற்கரைகள் கருதப்படுகின்றன. இதற்காக ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதத்தில் தொடங்கி மார்ச் மாதம் வரையிலான காலகட்டத்தில் உலகின் பல்வேறு நாட்டு கடல்களிலும் வாழும் ஆலிவ் ரிட்லி ஆமைகள் பல்லாயிரக்கணக்கான கடல் மைல் தொலைவுக்கு பயணம் செய்து வங்கக் கடலோ



ரத்திற்கு வருகின்றன.

ஒடிசாவின் கஹிர்மாதா, ருசிகுல்யா கடற்கரைக்கு செல்லும் கடல் ஆமைகள் எந்த அச்சுறுத்தலும் இல்லாமல் முட்டையிட்டு குஞ்சு பொறித்துச் செல்லும் நிலையில், தமிழ்நாட்டில் சென்னை பழவேற்காடு முதல் கல்பாக்கம் வரையிலான கடற்கரைக்கு முட்டையிடுவதற்காக வரும் ஆலிவ் ரிட்லி கடல் ஆமைகள் மட்டும் கொத்துக் கொத்தாக உயிரிழப்பது பெரும் கவலையளிக்கிறது.

சென்னையிலும், சென்னை புறநகர் பகுதிகளிலும் ஒவ்வொரு நாள் காலையிலும் பார்த்தால் ஏராளமான கடல் ஆமைகள் உயிரிழந்து கிடக்கின்றன. கிழக்குக் கடற்கரையோரப் பகுதிகளில் இறந்து கிடக்கும் கடல் ஆமைகள் அகற்றப்படாததால் துர்நாற்றம் வீசுவதாகக் கூறி அங்குள்ள மக்கள் போராட்டம் நடத்தும் அளவுக்கு நிலைமை மோசமடைந்திருக்கிறது. சென்னைக்கும் கல்பாக்கத்துக்கும் இடைப்பட்ட பகுதிகளில் கடல் ஆமைகள் அதிக அளவில் கொல்லப்படுவதற்கு அந்தப் பகுதிகளில் இழுவைப் படகுகளை பயன்படுத்தியும், நீண்ட மீன் பிடி வலைகளை பயன்படுத்தி மீன்கள் பிடிக்கப்படுவதும் தான் காரணம் ஆகும்.

கடற்கரையில் இருந்து 5 கடல் மைல் தொலைவில் தான் கடல் ஆமைகளின் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்பதால், அந்த பகுதிகளில் கடல் ஆமைகள் முட்டையிடும் காலத்தில் இழுவைப் படகுகளையும், நீண்ட வலைகளையும் பயன்படுத்துவதற்கு 1983 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கடல்பகுதி மீன்பிடி ஒழுங்குமுறை சட்டத்தின்படி தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்தத் தடை முழுமையாக செயல்படுத்தப்படாதது தான் ஆயிரக்கணக்கில் ஆலிவ் ரிட்லி கடல் ஆமைகள் கொத்துக் கொத்தாக கொல்லப்படுவதற்கு முதன்மைக் காரணம் ஆகும்.

இழுவைப் படகுகளால் கடல் ஆமைகள் கொல்லப்படுவதைத் தடுப்பதற்கான சிறந்த வழி அவற்றில் கடல் ஆமைகள் சிக்காமல் விலக்கி விடுவதற்கான கருவிகளை பொருத்துவது தான். அனைத்து இழுவைப் படகுகளிலும் இத்தகைய கருவிகள் பொருத்தப்பட வேண்டியது கட்டாயம் ஆகும். கடல் ஆமைகள் முட்டையிடும் காலம் தொடங்குவதற்கு முன்பாக இழுவைப் படகுகளில் இத்தகைய கருவிகள் பொருத்தப்பட்டுள்ளனவா? என்பதை ஆய்வு செய்ய வேண்டியது அரசின் கடமை. ஆனால், இந்தக் கடமையை தமிழக அரசு ஒருபோதும் செய்வதில்லை என்பது தான் வேதனையான உண்மையாகும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.


# யமுனை நீரை குடிப்பதுபோல் ஹரியானா முதல்வர் நாடகம் | ஆம் ஆத்மி விமர்சனம்

அரவிந்த் கேஜ்ரிவாலின் சவாலை ஏற்றுக்கொள்வது போல் நடித்த ஹரியானா முதல்வர் நயாப் சிங் சைனி, யமுனை நீரைக் குடிக்கவில்லை, வாயில் வைத்துவிட்டு துப்பினார் என்று ஆம் ஆத்மி கட்சி விமர்சித்துள்ளது.

ஆம் ஆத்மி கட்சியின் செய்தித் தொடர்பாளர் பிரியங்கா காக்கர் செய்தி நிறுவனம் ஒன்றிடம் பேசுகையில்,

“மகா கும்பமேளாவில் மிகப்பெரிய துயரச் சம்பவம் நிகழ்ந்த நிலையில் பிரதமர் மோடி டில்லியில் அரவிந்த் கேஜ்ரிவாலை விமர்சிக்கிறார். நீங்கள் பா.ஜ.கவுக்கு வாக்களித்தால் முதலில் ஒரு ஜெனரேட்டர் வாங்கி வைக்க வேண்டும் என்று நாங்கள் அனைவரிடமும் கூறியிருக்கிறோம்.

யமுனை நதியில் இருந்து தண்ணீர் எடுத்துக் குடிப்பது போல ஹரியானா முதல்வர் நயாப் சிங் சைனி ஒரு நாடகம் நிகழ்த்தியதைப் பார்த்தோம். அவர் தண்ணீரைக் குடிக்கவில்லை. நீரை வாயில் வைத்ததும் அதனைத் துப்பிவிட்டார். இதுபோன்ற நாடகங்கள் மூலம் மக்களை திசை திருப்புவதை விட, யமுனை எவ்வளவு மாசுபட்டுள்ளது என்பதை அவர் தெரிவிக்கவேண்டும்.”



என்று தெரிவித்திருந்தார்.

முன்னதாக டில்லியின் முன்னாள் முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலின் சவாலுக்கு பதில் அளிக்கும் விதமாக டில்லியின் பல்லா கிராமத்தில் உள்ள யமுனை நதிக்கரைக்கு வந்த ஹரியானா முதல்வர் நயாப் சைனி, நதியிலிருந்து ஒரு கை தண்ணீர் எடுத்து குடித்தார். பின்பு பேசிய அவர் கேஜ்ரிவாலின் குற்றச்சாட்டு துரதிருஷ்டவசமானது. அரசியல் “ஆதாயங்களுக்காக மக்களின் மனதில் பயத்தை உருவாக்குகிறார்” என்றும் சாடியிருந்தார்.

ஹரியானா அரசு யமுனை நதியை விஷமாக்கி, அந்தத் தண்ணீரை டெல்லி மக்களுக்கு வழங்குவதன் மூலம் அவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் நோக்கத்துடன் செயல்படுகிறது என்று குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதனிடையே, டில்லியின் பஞ்சாப் பவன் அருகே லட்சக்கணக்கான பணம், ஆம் ஆத்மி கட்சி துண்டறிக்கைகள், மதுபாட்டில்களுடன் பிடிக்கப்பட்ட பஞ்சாப் வாகனம் பற்றி பேசிய ஆம் ஆத்மி செய்தித் தொடர்பாளர் பிரியங்கா காக்கர், சம்மந்தப்பட்ட அந்த வாகனம் மகாராஷ்டிராவைச் சேர்ந்த ஒரு பா.ஜ.க. தொண்டருக்குச் சொந்தமானது. வாகனத்தின் நம்பர் ப்ளேட்டும் வேறு ஒரு வாகனத்தினுடையது. அப்படி ஒரு வாகனம் தங்கள் மாநிலத்தில் பதிவு செய்யப்படவில்லை என்பதை பஞ்சாப் பொலிஸ் உறுதி செய்துள்ளது என்று தெரிவித்தார்.

டில்லி பொலிஸின் அறிக்கை ஒன்றில், “பஞ்சாப் மாநில பதிவு எண் மற்றும் பஞ்சாப் சர்கார் என்று எழுதப்பட்ட வாகனம் ஒன்று டெல்லியின் பஞ்சாப் பவன் அருகில் நிற்பதாக ஒரு தகவல் இன்று கிடைத்தது. அந்த வாகனத்தைச் சோதனை செய்த போது, அதில் லட்சக்கணக்கான பணம், மதுபாட்டில்கள், ஆம் ஆத்மி கட்சி துண்டு பிரசுரங்களும் இருந்தன. புதுடில்லி மாவட்டத்தின் திலக் மார்க் காவல் நிலையத்தால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க ஏர்லைன்ஸ் விபத்து; 30 பேரின் சடலங்கள் மீட்பு!



அமெரிக்கப் பயணிகள் விமானம் ஒன்று ஹெலிக்கொப்டர் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளான சம்பவத்தில் இதுவரை 30 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் கன்சாஸ் மாகாணத்திலிருந்து 64 பேருடன் பயணித்த விமானம் அந்த நாட்டு இராணுவ ஹெலிக்கொப்டர் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதனையடுத்து அந்த விமானம் மற்றும் ஹெலிக்கொப்டர் என்பன பொட்டோமெக் ஆற்றில் வீழ்ந்துள்ளன.

இந்த சம்பவம் நேற்று காலை அமெரிக்காவின் ரொனால்ட் ரீகன் தேசிய விமான நிலையத்தில் விமானத்தை தரையிறக்க முற்பட்டபோது இடம்பெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது.

விபத்துக்குள்ளான விமானத்தில் 60 பயணிகள் மற்றும் 4 பணியாளர்கள் பயணித்ததுடன் ஹெலிக்கொப்டரில் 3 இராணுவ உத்தியோகத்தர்கள் இருந்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், மீட்புப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன், விபத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படாத நிலையில், விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சர்வதேச ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



# ஜேர்மனியின் பொருளாதாரம் மந்த நிலையை அடைந்தது

ஜேர்மன் பொருளாதாரம் 2024 இன் இறுதிக் காலாண்டில் எதிர்பார்த்ததை விட அதிகமாக சுருங்கியதுடன் மீண்டும் பொருளாதார மந்தநிலை அச்சத்தை தூண்டியது.

ஐரோப்பாவின் மிகப்பெரிய பொருளாதாரம் கூட்டாட்சி தேர்தல்களுக்கு முன்னதாக நிச்சயமற்ற தன்மையுடன் போராடுகிறது.

ஜெர்மனியின் மொத்த உள்நாட்டு உற்பத்தி முந்தைய மூன்று மாத காலத்துடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில் 0.2 வீதம் குறைந்துள்ளது என்று அந்நாட்டு புள்ளியியல் அலுவலகத்தின் ஆரம்ப தரவு நேற்று வியாழக்கிழமை வெளிக்காட்டியது.

2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டு வளர்ச்சி எதிர்மறையாக இருந்தால், பொருளாதாரம் மீண்டும் மந்தநிலையில் விழும் - பொதுவாக இரண்டு தொடர்ச்சியான காலாண்டு



சுருக்கம் என வரையறுக்கப்படுகிறது.

வெளிநாட்டில் இருந்து அதிகரித்து வரும் போட்டி, அதிக எரிசக்தி செலவுகள், உயர்ந்த வட்டி விகிதங்கள் மற்றும் நிச்சயமற்ற பொருளாதார வாய்ப்புகள் ஆகியவை ஜெர்மனியின் பொருளாதாரத்தை பாதித்துள்ளன.

இது 2024 இல் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக தாக்கத்தை செலுத்தியது.

அதன் வருடாந்த பொருளாதார அறிக்கையில், வர்த்தக பதட்டங்கள் மற்றும் வரவிருக்கும் தேர்தலில் வளர்ந்து வரும் உள்நாட்டு நிச்சயமற்ற தன்மை காரணமாக, முன்னர் எதிர்பார்க்கப்பட்ட 1.1 வீதம் வளர்ச்சியில் இருந்து இந்த ஆண்டுக்கான அதன் கணிப்பை 0.3 வீதம் என்று அரசாங்கம் குறைத்துள்ளது.

சில வணிக சங்கங்கள் 2025 இல் மற்றொரு பொருளாதார சுருக்கத்தை முன்னறிவித்தன.

இதனால், ஜெர்மனியை பொருளாதாரம் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் சரிவு பாதையில் உள்ளது.

ஜேர்மனியின் நலிவடைந்த பொருளாதாரத்தை எவ்வாறு புத்துயிர் பெறுவது என்பது பற்றிய சர்ச்சை நவம்பரில் அரசாங்கத்தின் சரிவுக்கு பங்களித்தது, பெப்ரவரி 23 அன்று உடனடி தேர்தல்களுக்கு களம் அமைத்தது.

இதில் பொருளாதாரம் வாக்காளர்களிடையே முக்கிய கவலையாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 31.01.2025




இன்றைய நாள் உங்களுக்கு சாதக மான நாளாக அமையும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். உங்கள் இலக்குகளை நீங்கள் அடைவீர்கள்.

இன்று உங்களின் பெரும்பான்மையான ஆற்றலைப் பயன்படுத்துவீர்கள். அது உங்கள் பணி யில் பிரதிபலிக்கும். உங்களின் தனித் திறமைகளை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக அதே சமயம் நகைச்சுவை உணர்வுடன் நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே புரிந்துணர்வும் நல்லிணக்கமும் அதி கரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.

உங்களின் உற்சாகமான மனநிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் அனுகூலம் குறைந்து காணப்படும். வெற்றியைப் பெற பொறுமை அவசியம். நீங்கள் சில தடைகளை சந்திக்க நேரலாம். எனவே திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப் படும். எவ்வளவு கடினமாக உழைத்தாலும் பலன் இருக் காது. உங்கள் பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடனான உறவு குறித்து பெரியவர்கள் ஆலோசனை வழங்கினாலும் நீங்கள் கேட்கும் மனநிலை யில் இருக்க மாட்டீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையில் மோதல்கள் ஏற்படும்.

இன்று பயணத்தின் போது பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. நீங்கள் பணத்தை கவனமுடன் கையாளவும்.

கண்களில் ஏற்படும் கோளாறும் முதுகுவலியும் உங்களை பாதிக்கும்.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. தேவையற்ற விஷ யங்களுக்கு பதட்டமடைவீர்கள் அதனை தவிர்த்து உற்சாகமாக இருக்க வேண்டி யது அவசியம்.

பணியில் நல்ல பெயர் எடுப்பதற்கான சாத்தியம் இல்லை. இதனால் உங்களுக்கு வருத்தம் ஏற்படும். உங்கள் சகபணியாளர்களை நண்பர்கள் போல கருதிப் பழக வேண்டும்.

உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். உங்கள் துணையுடன் சுமூக உறவு கொள்ள வேண்டி யது மிகவும் அவசியம். அப்பொழுதுதான் நல்ல புரிந் துணர்வு காணப்படும்.

சம்பாதித்த பணத்தை இன்று குடும்பத்திற்காக செலவு செய்வீர்கள். பணத்தை அதிகமாக சம்பாதிப்பதற்கும் சேமிப்பதற்கும் வாய்ப்பு குறைவு.




இன்று வெற்றிகரமான நாளாக அமை யும். உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக பணிகளை எளிதாக முடிப் பீர்கள். உங்களிடம் அதிக ஆற்றல் மற்றும் விழிப்புணர்வு காணப்படும்.அவை உங் களின் வெற்றிக்கு வழி வகுக்கும்.

உங்கள் பணியில் உங்களுக்கு திருப்தி கிடைக்கும். பணிகளை தன்னிச்சையாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள் வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படும். உங்கள் வங்கியிருப்பு சிறப்பாக இருக்கும்.

இன்று ஆரோக்கியத்தை சிறப்பாக பாரமரிப்பீர்கள். உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரண மாக திடமாக இருப்பீர்கள்.




இன்று மன உளைச்சல் காணப்படும். பாடல்கள் கேட்பது அல்லது திரைப் படங்கள் பார்ப்பது போன்ற நிகழ்சிகள் மூலம் மனதில் மகிழ்ச்சி ஏற்படுத்திக் கொள்ளலாம். முக்கிய முடிவுகள் எடுப் பதை இன்று தவிர்க்கவும்.

இன்று பணிகள் மலை போல் குவிந்து கொண்டே இருக்கும். இதனால் கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்ப தில் தாமதங்கள் காணப்படும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். அதிக பணம் சேர்ப்பதற்கு குறைந்த வாய்ப்புகளே காணப்படும்.

ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் காணப்படாது. என்றாலும் உங்கள் உடன் பிறப்புகளின் நலனுக்காக பணம் செலவு செய்ய வேண்டி நேரும்.




இன்றுநற்பலன்கள்கூடுதலாககிடைக் கும். முக்கிய முடிவுகள் நல்ல பலன் களை அளிக்கும். சிறிய முயற்சிகள் கூட இன்று வெற்றியை அளிக்கும்.

நீங்கள் செய்யும் பணியில் சிறப்பான வளர்ச்சி பெறுவீர்கள். உங்கள் மேலதி காரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பாக நடந்து கொள்வீர் கள். இதனால் அவரை நன்கு புரிந்து கொள்ள முடி யும்.

இன்று பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. இதனால் உங்கள் வருமானம் உயரும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்திருக்கும்.




கூடுதல் பொறுப்புகள் காரணமாக இன்று உங்கள் செயல்களை செய்வது கடினமாக உணர்வீர்கள். இன்று அமைதி யின்மை காணப்படும். நேர்மறை எண்ணம் மூலம் இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ள லாம்.

இன்று பணிச்சுமைகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் கூடுதல் பொறுப்புகள் காணப்படும்.

கருத்து வேறுபாடு காரணமாக துணையுடன் மோதல் கள் காணப்படும். இருவரும் மகிழ்ச்சியாக இருக்க இந்த வேறுபாடுகளை களைவது சிறந்தது. புத பகவான் உறவின் நல்லிணக்கத்தில் பாதிப்பை ஏற்படுத்துவார்.

இன்று அதிக பொறுப்புகள் காரணமாக செலவுகள் அதிகமாக காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். என்றாலும் உறுதியும் ஈடுபாடும் தடைகளை வெற்றிப் படிகளாக்கும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். இந்தப் பயணம் உங்க ளுக்கு மகிழ்ச்சிகரமானதாக அமையாது. விரும்பத்தாதக தருணங்களை சந்திக்க நேரும்.

உங்கள் துணையுடம் அமைதியாக மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். மகிழ்ச்சியை பராமரிக்க உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். எனவே சம்பாதிக்கும் பணத்தைக் கொண்டு மகிழ்ச்சி அடையும் நிலை காணப்படாது.

இன்று பதற்றம் காணப்படும். நீங்கள் அதிகப்படியாக வருத்திக் கொள்ள வேண்டாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 31.01.2025




இன்றைய நாளில் அனுகூலம் சற்று குறைந்து காணப்படும். நீங்கள் எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று எதையோ இழந்தது போல உணர்வீர்கள்.

பணிகளைப் பொறுத்த வரை இன்று சற்று கடினமாக காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு குறைந்து காணப்படும்.

நகைச்சுவை அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள்.

இன்று பணத்தை கடனாக வாங்குவீர்கள். அதன் மூலம் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள் வீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங் களிடம் காணப்படும் உறுதி மற்றும் தைரியம் உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்திருக்கும்.




இன்று அமைதியுடன் இருக்க நீங்கள் தைரியம் மற்றும் உறுதியுடன் நம்பிக் கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் தன்னம்பிக்கையை வளர்த் துக் கொள்ள நீங்கள் நேர்மறை எண் ணத்துடன் இருக்க வேண்டும்.

அதிகமான பணிகள் காரணமாக இன்று நீங்கள் ஓய்வின்றி வேலை செய்வீர்கள். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற விவாதங்களை தவிர்க்க வேண்டும். உங்களின் மன நிலை தான் எல்லா வற்றிற்கும் காரணம் என்பதால் மனதை அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்புக்கான வாய்ப்புகள் உள்ளன. வீண் விரயங்கள் காணப்படும்.




இன்று எதிர்பாராத நன்மைகள் கிடைக்கும். அது உங்களுக்கு திருப்தி அளிக்கும். விருந்தினர் வரகை உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். இதனால் மகிழ்ச்சி யாக இருப்பீர்கள்.

பணியிடத்தில் உற்சாகமான வாய்ப்புகள் காத்திருக்கும். பணியிடச் சூழல் இனிமை யாக இருக்கும். இன்று மகிழ்ச்சியுடன் பணியாற்றுவீர் கள்.

உங்கள் துணையுடன் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் அன்பை நிரூபித்துக் காட்டுவீர் கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக வளர்ச்சி பெரும். இன்று உங்களின் கடின உழைப்பிற்காக ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் வகையில் பணவரவு காணப்படும்.




நீங்கள் அறிவு பூர்வமாக செயலாற்று வதன் மூலம் இன்று எழும் பிரச்சினை களைக் கையாள இயலும். இன்றைய நாளைச் சாதகமாக்கிக் கொள்வது உங்கள் கையில் தான் உள்ளது.

சிறப்பாக பணியாற்றுவதற்கு இன் றைய நாள் அனுகூலமாக இருக்காது. பணிகள் அதிக மாக இருக்கும் என்பதால் முறையாக திட்டமிடுவது அவசியம்.

நீங்கள் சிறிய விஷயத்தை கூட பெரிய அளவில் காண்பீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளி-ப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியான போக்கு சிறந்தது.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். பொறுப்புகள் அதிகமாக காணப்படுவதால் கையில் பணம் குறைவாக காணப்படும்.

# 6 பொருள்களின் விலைகள் குறைப்பு



6 அத்தியாவசியப் பொருள்களுக்கான விலைகளை லங்கா சதொச நிறுவனம் குறைத் துள்ளது.

அதற்கமைய பெரிய வெங்காயம் ஒரு கிலோ கிராம் 10 ரூபாவால் குறைக்கப்பட்டு நேற்று முதல் 220 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

கோதுமை மா ஒரு கிலோ கிராமின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 165 ரூபாவாகும்.

வெள்ளை சீனி ஒரு கிலோகிராமின் விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டு 235 ரூபாவிற்கும் மைசூர் பருப்பு ஒரு கிலோகிராமின் விலை 3 ரூபாவால் குறைக்கப்பட்டு 285 ரூபாவிற்கும் வெள்ளை பச்சையரிசி ஒரு கிலோகிராமின் விலை ஒரு ரூபா வினால் குறைக்கப்பட்டு 209 ரூபாவிற்கும் சதொச ஊடாக விற்பனை செய்யப்படவுள்ளது.

# மேல் மாகாண ஆளுநர் சி.ஐ.டியில் முறைப்பாடு



தமக்கு எதிராக சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை நடத்துமாறு கோரி மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப் குற்றப் புலனாய்வு திணைக் களத்தில் நேற்று முறைப்பாடு செய்தார்.

துறைமுகத்திலிருந்து முறையான சோதனையின்றி 323 கொள்கலன்கள் விடு விக்கப்பட்டதாகவும் அரசாங் கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் தொடர்புபட்டுள்ளார் என ஐக் கிய மக்கள் சக்தியின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளின் அரசியல்வாதிகள் பகிரங்கமாக குற்றச்சாட்டினர்.

விடுவிக்கப்பட்ட கொள் கலன்களின் என்ன இருந்த தென தெரியாத நிலையில் சமூ கத்தில் இவ்விடயம் பூதாகரமாக வெடித்து தற்போது பேசுபொரு ளாகியுள்ளது.

இந்நிலையில் கடந்த சில நாள்களாக தம்மை இலக்கு வைத்து அடிப்படையற்ற பொய்யான குற்றச்சாட்டுக்களை சிலர் சுமத்துவதாகவும் இதனை தொடர்ந்தும் பொறுத்துக்கொள்ள முடியாத நிலையில் குற்றப்புல னாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்ததாகவும் மேல் மாகாண ஆளுநர் குறிப்பிட்டார்.

தோல்வியடைந்த குழு வொன்று இவ்வாறு குற்றச் சாட்டுக்களை முன்வைக்கும் போது மௌனமாக இருக்க முடியாது எனவும் தமது நற் பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ள தால் முறையான விசாரணை களை நடத்துமாறு குற்றப்புல னாய்வு திணைக்களத்திடம் முறைப்பாடு செய்ததாகவும் அவர் கூறினார்.